www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi11Acc

தென்காசி மாவட்டம்
முதல் திருப்புதல் தேர்வு - 2024

11417

-----

வகுப்பு 11

காலஅளவு: 3.00 மணிநேரம் கணக்குப்பதிவியல் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20×1=20
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) GAAP என்பது
அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
ஆ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
ஈ) இவற்றுள் ஏதுமில்லை

2) ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
அ) குறிப்பிட்ட நாளில் ஆ) ஒரு ஆண்டிற்கு
இ) ஆண்டு இறுதியில் ஈ) இவை ஏதும் இல்லை

3) உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
அ) ரொக்க க/கு ஆ) எடுப்புக் க/கு
இ) முதல் க/கு ஈ) அனாமத்து க/கு

4) சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம் பேரேட்டில் ......... தயாரிக்க தேவை இல்லை
அ) முதல் க/கு ஆ) விற்பனைக் க/கு
இ) ரொக்கக் க/கு ஈ) கொள்முதல் க/கு

5) காசோலை மூலம் சம்பளம் வழங்கியது ரூ.3000 என்பதை குறிப்பேட்டுப்பதிவில் வரவு வைக்கப்பட வேண்டிய கணக்கின் பெயர்
அ) வங்கி க/கு ஆ) சம்பளக் க/கு இ) எடுப்பு க/கு ஈ) ரொக்க க/கு

6) இறுதிச் சரக்கிருப்பு என்பது ஓர்
அ) கற்பனைச் சொத்து ஆ) நிலையான சொத்து
இ) புலனாகாச் சொத்து ஈ) நடப்புச் சொத்து

7) நடப்பு ஆண்டின் ஒரு பேரேட்டுக் கணக்கின் இறுதி இருப்பு ........... தொடக்க இருப்பாகும்.
அ) கடந்த ஆண்டு ஆ) அடுத்த ஆண்டு
இ) நடப்பு ஆண்டு ஈ) இவற்றில் ஏதுவும் இல்லை

8) சொத்தின் இறுதி மதிப்பு என்பது பயனளிப்பு காலத்தின் ............. அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.
அ) இறுதியில் ஆ) மத்தியில்
இ) இறுதியில் ஈ) இவைகளில் ஏதுமில்லை

9) சொத்து கணக்கு கையாள்வது
அ) சொத்துகள்
ஆ) தனிப்பட்ட நபர்கள்
இ) வருமானம் மற்றும் இலாபங்கள்
ஈ) செலவுகள் மற்றும் இழப்புகள்

10) இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது
அ) முழுவிடு பிழை ஆ) பகுதிவிடு பிழை
இ) இருமுறை பதிந்த பிழை ஈ) விதிப்பிழை

11) ரொக்க ஏடு ஒரு
அ) துணை ஏடு
ஆ) முதன்மை ஏடு
இ) உரிய குறிப்பேடு
ஈ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12) இருப்பாய்வில் தோன்றும் சம்பளம் எங்கு காண்பிக்கப்படும்?
அ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்
ஆ) வியாபாரக் கணக்கின் பற்று பக்கம்
இ) இருப்புநிலைக் குறிப்பின்சொத்துகள் பக்கம்
ஈ) இலாப நட்ட கணக்கின் பற்று பக்கம்

13) வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு
இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி
ஈ) சில்லறை ரொக்க ஏடு

14) பின்வருவனவற்றில் எது ஒன்று கணக்குகளை குறி முறையாக்கம் செய்யும் முறைகளில் இல்லாதது?
அ) தொகுப்புகுறிமுறை ஆ) அணுகக் குறி முறை
இ) மதிப்பேட்டுக் குறிமுறை ஈ) தொடர்ச்சியான குறிமுறை

15) விற்பனைத் திருப்ப ஏடு பதிவு செய்வது
அ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது
ஆ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது
இ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது
ஈ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது

16) புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு ரூ.20,000 என்பது
அ) முதலினச் செலவு ஆ) தொடக்கச் செலவு
இ) நீள் பயன் வருவாயினச் செலவு ஈ) வருவாயினச் செலவு

17) திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் ........... க்கு ஏற்றவை.
அ) பெரிய, நடுத்தர வணிகம் ஆ) பெரிய தனித்தன்மையான வணிகம்
இ) சிறிய பாரம்பரிய வணிகம் ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

18) கீழ்க்கண்ட கணக்குகளில் எந்த கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் தோன்றும்?
அ) எடுப்புகள் கணக்கு ஆ) பற்பல கடனீந்தோர் கணக்கு
இ) முதல் கணக்கு ஈ) செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

19) ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்றுப் பத்தியின் மொத்தத்திலிருந்து மற்றும் வரவுப் பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகர இருப்பினை கண்டறியும் வழிமுறையை .......... என அழைக்கலாம்.
அ) குறிப்பேட்டில் பதிதல் ஆ) கூட்டுதல்
இ) இருப்புக் கட்டுதல் ஈ) எடுத்தெழுதுதல்

20) கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது
அ) அனைத்து சரக்குகளின் கடன்கொள்முதல்
ஆ) அனைத்து சரக்குகளின் கொள்முதல்
இ) அனைத்து சொத்துகளின் கொள்முதல்
ஈ) அனைத்து சொத்துகளின் கடன் கொள்முதல்

## பகுதி - II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **7×2=14**

21) கணக்கியலை வரையறுக்கவும்.
22) இருப்பாய்வு என்றால் என்ன?
23) ஏதேனும் இரண்டு கணக்கியல் தொகுப்பின் பெயரைக் குறிப்பிடவும்.
24) கூடியுள்ள வருமானம் என்றால் என்ன?
25) ஒரு நிறுவனம் ரூ.55000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ரூ.5000 மேற்கொண்டது. எதிர் நோக்கும் பயனளிப்புக் காலம் 3 ஆண்டுகள். நேர்கோட்டு முறையில் தேய்மானத் தொகை கணக்கிடுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

26) சஞ்சயின் ஏடுகளில் 31 டிசம்பர் 2017 ஆம் ஆண்டின் வியாபாரக் கணக்கைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 570 | கொள்முதல் | 15800 |
| விற்பனை | 26200 | கொள்முதல் திருப்பம் | 90 |
| விற்பனைத்திருப்பம் | 60 | இறுதிச் சரக்கிருப்பு | 860 |

27) பின்வரும் செலவுகள் முதலினமா அல்லது வருவாயினமா எனக் கூறுக.

i) கட்டடம் கட்டியதற்கான தொகை ரூ.500000

ii) அறைகலன் பழுது பார்த்தது ரூ.25000

28) சரிக்கட்டுப் பதிவுகள் என்றால் என்ன?

29) பின்வரும் குறிப்பேட்டு பதிவில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | பே ப.எ. | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| 2018 ஏப் 1 | ............... க/கு ப<br>.............. க/கு<br>(தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் ரொக்கம் எடுத்தது ரூ.6000 | | .......... | ............ |

30) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சரக்கு விற்பனைக்கான அடக்கத்தினை கணக்கிடவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 10000 | மறைமுகச் சரக்கிருப்பு | 5000 |
| கொள்முதல் | 80000 | இறுதிச் சரக்கிருப்பு | 15000 |
| நேரடிச் செலவுகள் | 7000 | | |

## பகுதி - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **7×3=21**

31) கணக்கியலின் பிரிவுகளை எழுதுக.

32) இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

33) பின்வரும் நடவடிக்கைகளை எழுது பொருள் வியாபாரம் செய்யும் ராஜ் நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிவு செய்க.

2020 ஏப்ரல் 1. அன்பு & கோ விற்கு கடனுக்கு விற்றது ரூ.3000

5. ஜெகதீஷ் & கோ விற்கு கடனுக்கு விற்றது ரூ.2160

10. பழைய செய்தித்தாள் ரொக்கத்திற்கு விற்றது ரூ.600

34) பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிந்து ரொக்கப் பேரேட்டினை தயாரிக்கவும்.

2019 ஜன 1. ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ.20,000

5. வங்கியில் செலுத்தியது ரூ.10,000

7. ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ.2,000

35) பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருட்கள் யாவை?

36) 2019 மே மாதத்திற்கான ராகுல் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| மே | 1 | கையிருப்பு ரொக்கம் | ரூ.40000 |
| | 7 | கூலி ரொக்கமாகக் கொடுத்தது | ரூ.2000 |
| | 15 | ரொக்கத்திற்கு விற்பனை செய்தது | ரூ.9000 |
| | 22 | சபாபதிக்கு ரொக்கம் செலுத்தியது | ரூ.5000 |
| | 28 | சம்பளம் கொடுத்தது | ரூ.2500 |

37) பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.

i) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது

ii) கடனுக்கு சரக்கு வாங்கியது

iii) உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



38) கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக

அ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
ரூ.100000 = ரூ.80000 + .........?.......

ஆ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
ரூ.200000 = ? + ரூ.40000

இ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்
? = ரூ.160000 + ரூ.80000

39) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்ற பொருளின் அடக்கவிலையைக் கணக்கிடுக.

| விவரம் | ரூ. |
|---|---|
| தொடக்கச்சரக்கிருப்பு | 8000 |
| கொள்முதல் | 60000 |
| நேரடிச் செலவுகள் | 5000 |
| மறைமுகச்செலவுகள் | 6000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 9000 |

40) கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக.

i) கொள்முதல் ii) எடுப்புகள் iii) முதல் iv) கொள்முதல் திருப்பம்
v) உள்தூக்கு கூலி vi) வட்டி பெற்றது.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் **7×5=35**

41) அ) பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டு பதிவு தருக.

| 2010 ஜனவரி | | ரூ. |
|---|---|---|
| 1. | ரிஷி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 50000 |
| 2. | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 4000 |
| 3. | இரவியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 10000 |
| 4. | இரவிக்கு ரொக்கம் செலுத்தியது | 7000 |
| 5. | சொந்த பயனுக்காக ரொக்கம் எடுத்தது | 6000 |
| 6. | வங்கியில் செலுத்திய ரொக்கம் | 2000 |
| 7. | காசோலை மூலம் சம்பளம் வழங்கியது | 3000 |
| 8. | மதுவிற்கு கடனாக விற்ற சரக்கு | 9000 |
| 9. | வங்கியிடமிருந்து கடன் பெற்றது | 10000 |
| 10. | கழிவு ரொக்கமாகப் பெற்றது | 1000 |

(அல்லது)

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதியவும்

| 2017 | | | ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி | 1. | கைரொக்கம் | 11500 |
| | 5. | ரொக்க வைப்பு இயந்திரத்தின் மூலம் இராமநாதனுக்கு செலுத்தியது | 300 |
| | | அவர் அளித்த தள்ளுபடி | 10 |
| | 8. | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 400 |
| | 10. | இராஜகோபாலிடமிருந்து ரொக்கம் பெற்றது | 980 |
| | | அவருக்கு அளித்த தள்ளுபடி | 20 |
| | 15. | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 400 |
| | 21. | சாந்தி என்பவருக்கு ரொக்கம் | 295 |
| | | அவரிடம் பெற்ற தள்ளுபடி | 5 |
| | 25. | கூலி ரொக்கமாகச் செலுத்தியது | 50 |
| | 26. | சஞ்சீவ் என்பவருக்கு ரூ.300 அளித்து கணக்கு முழுவதும் தீர்த்துக் கொண்டது | 400 |

42) அ) மோட்டார் வாகனப் பொருட்களை விற்பனை செய்யும் ராஜூ என்பவரது ஏடுகளிலிருந்து 2017 மார்ச் 31 ஆம் நாளன்று எடுக்கப்பட்ட கணக்குகளின் பின்வரும் இருப்புகளில் இருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| கைரொக்கம் | 5500 | நேரடிச் செலவுகள் | 5000 |
| பெற்ற தள்ளுபடி | 300 | வெளித்தூக்குக் கூலி | 3500 |
| கடனீந்தோர் | 15000 | முதல் | 45000 |
| கட்டடம் | 50000 | கொள்முதல் | 49700 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 6000 | விற்பனை | 59400 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து ஆனந்த் என்பவரின் கணக்கைத் தயாரிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 2017 ஜூலை | 1 | ஆனந்த் கணக்கின் வரவு இருப்பு | ரூ.4000 |
| | 15. | ஆனந்த்க்கு ரொக்கம் செலுத்தியது | ரூ.2000 |
| | 18. | ஆனந்திடமிருந்து கடனாகக் கொள்முதல் செய்தது | ரூ.8000 |
| | 20. | ஆனந்த் ரொக்கம் செலுத்தியது | ரூ.3960 |
| | | அவர் அளித்த தள்ளுபடி | 40 |
| | 25. | ஆனந்திடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | ரூ.5000 |

43) அ) இருப்பாய்விற்கும், இருப்புநிலைக் குறிப்பிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை எழுது.

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை பொன்னியின் விற்பனை ஏடு மற்றும் விற்பனைத் திருப்ப ஏட்டில் பதிவு செய்க.

**2017**

| | | | |
|---|---|---|---|
| ஆகஸ்ட் | 1 | செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது. | ரூ.20500 |
| | 4. | மாதவனுக்கு கடனுக்கு விற்றது | ரூ.12800 |
| | 7. | கனகாவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது | ரூ.7500 |
| | 15. | வரவுகுறிப்பு 7ன்படி செந்தில் திருப்பிய சரக்கு மதிப்பு ரூ.1500க்கு ரொக்கம் அளிக்கப்படவில்லை | |
| | 20. | செல்வத்திடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | ரூ.13300 |
| | 25. | வரவுக்குறிப்பு 11ன் படி மாதவன் திருப்பிய சரக்கு ரூ.1800 க்கு ரொக்கம் செலுத்தப்படவில்லை. | |

44) அ) செல்வியின் பேரேட்டிலிருந்து 2016 மார்ச் 31க்கான பின்வரும் இருப்புகள் பெறப்பட்டன. அவரின் வியாபாரக் கணக்கை தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| சரக்கிருப்பு (1-4-2015) | 10000 | விற்பனை | 300000 |
| கொள்முதல் | 160000 | விற்பனைத்திருப்பம் | 16000 |
| கூலி | 30000 | கொள்முதல் திருப்பம் | 10000 |
| உள்தூக்குகூலி | 10000 | எரிவாயு மற்றும் எரிசக்தி | 8000 |
| உள் ஏற்றிச் செல் செலவு | 8000 | | |

**கூடுதல் தகவல்கள்**

i) 31-03-2016 அன்றைய இறுதிச் சரக்கிருப்பு ரூ.20000

ii) கொடுபட வேண்டிய கூலி ரூ.4000

iii) முன்கூட்டிச் செலுத்திய எரிவாயு ரூ.1000 மற்றும் எரிசக்தி

**(அல்லது)**

ஆ) பேரேடு என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் யாவை?

45) அ) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

**2018**

| | | | |
|---|---|---|---|
| ஜூலை | 1 | காசாளரிடமிருந்து முன்பணம் பெற்றது | 2000 |
| | 7. | மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது | 150 |
| | 10. | ஏற்றிச் செல் செலவுகள் செய்தது | 350 |
| | 15. | கூலி கொடுத்தது | 300 |
| | 18. | தபால் செலவுகள் செய்தது | 100 |
| | 21. | எழுதுபொருட்கள் வாங்கியது | 600 |
| | 27. | சிற்றுண்டி செலவுகள் செய்தது | 310 |

**(அல்லது)**

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆ) பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

i) வங்கி
ii) வெளி ஏற்றிச் செல் செலவு
iii) கொள்முதல்
iv) ஹரிஷ்
v) அறைகலன்
vi) முன்கூட்டி செலுத்திய செலவு
vii) நற்பெயர்
viii) விற்பனை
ix) வட்டி பெற்றது
x) முதல்

46) அ) 2018 மார்ச் 31 ஆம் நாளுக்குரிய வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயார் செய்து ரொக்க ஏட்டின் படியான இருப்பினை கண்டறிக.

| | விவரம் | ரூ. |
|---|---|---|
| i) | வங்கி அறிக்கையின்படி வங்கி இருப்பு | 15000 |
| ii) | விடுத்த காசோலை இன்னும் செலுத்துவதற்கு முன்னிலைப்படுத்தப்படாது | 2500 |
| iv) | வங்கி கட்டணம் ரொக்க ஏட்டின்பதியப்படவில்லை | 250 |
| v) | வங்கியால் பற்று செய்யப்பட்ட வட்டி ரொக்க ஏட்டில் பதியப்பட வில்லை | 500 |
| vii) | நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 300 |
| ix) | செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 900 |

(அல்லது)

ஆ) முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு வேறுபடுத்தவும்.

47) அ) கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் ஐந்தினைத் தருக.

(அல்லது)

ஆ) மனோவின் 2020 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாப நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| மொத்த இலாபம் | 25000 |
| சம்பளம் | 5600 |
| காப்பீடு | 300 |
| அளித்த தள்ளுபடி | 400 |
| பெற்ற தள்ளுபடி | 300 |
| பெற்ற கழிவு | 100 |
| விளம்பரம் | 450 |
| அச்சு செலவுகள் | 375 |
| பயணச் செலவுகள் | 500 |
| எழுது பொருட்கள் செலவு | 75 |
| வாடகை | 650 |
| கடன் மீது வட்டி | 225 |
| பழுது பார்ப்புச் செலவுகள் | 125 |
| அலுவலகச் செலவுகள் | 55 |
| பொதுச் செலவுகள் | 875 |
| தபால் செலவுகள் | 175 |

**சரிக்கட்டுதல்கள்**

i) கொடுபட வேண்டிய சம்பளம் ரூ.400
ii) முன்கூட்டிச் செலுத்திய வாடகை ரூ.50
iii) கழிவு பெற வேண்டியது ரூ.100

- - - - - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com